மாநபி [ஸல்] காட்டிய மனித உரிமைகள்

செ.திவான்

மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்

('மணிச்சுடர்' நாளிதழ் நடத்திய
மாநிலந் தழுவிய கட்டுரைப் போட்டியில்
சிறப்புப் பரிசு பெற்றது)

வரலாற்று ஆய்வாளர்

செ.திவான் எம்.ஏ.,எம்.பில்.,

சுஹைனா பதிப்பகம்

106F,4A *(புதிய எண் 148) திருவனந்தபுரம் சாலை,*

பாளையங்கோட்டை.

✆ 0462-2572665

ஆசிரியரின் 56 வது நூல்

முதற்பதிப்பு	:	2004, சூன்
உரிமை	:	ஆசிரியருக்கே
விலை	:	ரூ. பத்து

வடிவமைப்பு	:	**காசி டி.டி.பி** 41,தெற்குபஜார் ,பாளை. செல் : 98944 31591
அச்சிட்டோர்	:	**சிவ சக்தி ஆர்ட்ஸ், சிவகாசி.** போன் . 04562 - 275005, 274005 செல் : 94433 79005.

'துஆ' செய்ய வேண்டுகிறோம்

பிறைஆசிரியர் மௌலானா M.**அப்துல்வஹ்ஹாப்** M.A.B.Tch., பன்னூலாசிரியர் திருச்சி **குலாம் ரசூல்**, இந்திய யூனியன் முஸ்லிம்லீக்கின் மாநில பொதுச்செயலாளர் கே.ஏ.**வஹாப்**, ரூஹின்செல்வர் நாகை டி.கே.எம்.**காதர்**, ரெங்கப்பநாயக்கர்பட்டி புலவரப்பா S.L.S.K.**காதர் மொய்தீன்**, சிறுகதையாசிரியர் **கருணா மணாளன்**, நல்லாசிரியர் இரவியதர்மபுரம் S.M.S. **முஹையதீன் பாட்ஷா சாஹிப்**, பாளையங்கோட்டை M.S.**உசேன்**, கடையநல்லூர் பேட்டை மாமா அ.மு.அ.**மைதீன் பிச்சை** ராவுத்தர் ஆகியோர் மறுஉலக நல்வாழ்விற்கும், நற்பேற்றிற்கும் இறையருள் இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

செ.திவான்

எண்ண அலைகள்

அகிலத்தின் அருட் கொடையாகத் தோன்றியவரும், அல்லாஹ்வின் இறுதித் திருத்தூதருமான அண்ணல் நபி முஹம்மது முஸ்தபா றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹூஅலைஹிவஸல்லம் அவர்கள் தமது வாழ்வில் மானிட சமுதாயத்தின் உரிமைகள் பலவற்றை நிலைநிறுத்தி, முன்மாதிரியாய் வாழ்ந்து காட்டினார்கள்.

தன் செல்வத்தைக் காத்திடும் உரிமை

அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அறிவிக்கின்றார்கள். அண்ணலார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், *"தன் செல்வத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும் போது கொல்லப்பட்டவர் இறைவழியில்உயிர்த்தியாகம் செய்தவர் (ஷஹீத்) ஆவார்." (ஸஹீஹூல் புகாரி, மூன்றாம் பாகம், ஹதீஸ் எண் : 2480, பக் 143)*

அண்ணலார் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! 'ஒருவர் எனது செல்வத்தைப் பறிக்கும் நோக்கத்தில் வந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார் , அவரிடம் 'உமது செல்வத்தை நீர் விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை' என்று நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்.

'அவன் என்னுடன் சண்டையிட்டால்' ...... என்று அந்த மனிதர் , கேட்டார். 'நீரும் அவனுடன் சண்டையிட வேண்டியது தான்' என்றார்கள் *(ஸஹீஹ் முஸ்லிம் 225, பக்கம் 170,171)*

நாயகத்தோழர் அபூஹூரைரா (ரலி) அவர்கள் அறிவித்த அண்ணலார் (ஸல்) அவர்களின் இந்த நாயக வாக்கியம் தனிமனிதன் தனது உரிமைக்காக உயிருள்ள வரைபோராட வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.இன்று சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக உலகம் உரக்கக் குரல் கொடுத்து வருகிறது.

ஃபிரான்செஸ்கோ கெப்போ ரோத்திரி

தொன்று தொட்டு நிலவி வரும் சிறுபான்மையினர் உரிமைகளுக்காக 1947 ஆம் ஆண்டில் மனித உரிமை ஆணையத்தின் உள்ளமைப்பாக "சிறுபான்மையினர் பாதுகாப்பு மற்றும் ஒரவஞ்சனைத் தவிர்ப்புக்கான உள் ஆணையம்" உருவாக்கப்பட்டது. 1971இல் மனித உரிமை ஆணையத்தின் உட்குழு தனது 24 வது கூட்டத்தில் நியமித்த சிறப்புத் தேர்வாளர் ஃபிரான்செஸ்கோ கெப்போரோத்திரியால் தயாரிக்கப்பட்ட இன மத மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பற்றிய ஆய்வை நடத்தியது.

சிறுபான்மையினர் உரிமைப் பிரகடனம்

1991-1993 இல் ஏ.ஐடே தயாரித்த சிறுபான்மையினர் பிரச்சினைக்கு அமைதியாக ஆக்கப்பூர்வமாகத் தீர்வுகாண வகை செய்யும் அறிக்கை வெளிவந்தது. சிறுபான்மையினர் பாதுகாப்புக்கான உலகளாவிய புது முயற்சிகள் இப்போது உருவாகத் தொடங்கியிருக்கின்றன.

18.12.1992 இல் ஐக்கிய நாடுகள் பேரவையில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது (47/135) தேசிய இன, சமயம் மற்றும் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர் உரிமைப் பிரகடனம் ஆகும். இது சிறுபான்மையினர் பிரச்சினைக்காகவே உருவான முக்கிய ஆவணம் ஆகும்.

ஐ.நா. பேரவைத் தீர்மானம்

'சிறுபான்மையினர் உரிமையைப் பேணி வழங்குதல், சட்டப்படி நடக்கும் மக்களாட்சியில் சமுதாய முன்னேற்றத்தின் இணை பிரியாத அம்சமாகும்' என்று பிரகடனத்தின் முகவுரை கூறுகிறது. பிரகடனத்தின் முதல் பிரிவோ, 'சிறுபான்மையினரின் தனித்துவத்தை உணர்ந்து வளர்க்குமாறு உலக நாடுகளைக் கோருகிறது.'

ஐ.நா பேரவைத் தீர்மானம் 48/138 நாள் 20.12.1993 இல் 'பிரகடனத்தின் விதிகளை ச்சட்ட மியற்றுதல் போன்ற பல்வேறு வழிகளின் மூலம் செயல்படுத்தி,

சிறுபான்மையினர் உரிமைகளை முழுமையாக செயல்படுத்துமாறு தனது உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.'

சிறுபான்மையினர் உரிமைகள்

சர்வதேசகுடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் உடன் படிக்கையின் பிரிவு 27 மற்றும் குழந்தைகள் உரிமை உடன்படிக்கையின் பிரிவு 30 ஆகியவை சிறுபான்மையினர் உரிமைபற்றிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. இதன் படி "சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு தனி நபருக்கும், தமது பண்பாட்டை அனுபவித்தல், சமயத்தைப் பின்பற்றுதல், மொழியைப் பயன்படுத்தலுக்கான உரிமைகள் மறுக்கப்படக் கூடாது" என்று வற்புறுத்துகிறது. *(வீ.லெவின், மனித உரிமைகள் வினாக்களும் விடைகளும், தமிழாக்கம் மா.சேது ராமலிங்கம் புதுதில்லி, 2000 பக் 30,31,32.)*

சிறுபான்மையினர் உரிமைகளுக்கென்று சர்வதேசச் சட்டங்கள் பல இருந்தாலும் அவை நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகின்றனவா என்பது கேள்விக்குறியான இந்த கால கட்டத்தில்,

1400 ஆண்டுகளுக்கு முன் மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள் பற்றிய மாநிலந் தழுவிய கட்டுரைப் போட்டியினை மணிச்சுடர் இதழ் நடத்தியது. அதில் எளியேன் பங்கேற்று சிறப்புப் பரிசினைப் பெற்றேன். அதன் விளைவே இச்சிறு நூல், இதனை வெளிக்கொணர என்னைத் தூண்டிய அண்ணன் ஐ.சாமுவேல் அவர்களுக்கும், இந்த நூல் வெளிவர கருணைபுரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இஸ்லாம் காட்டும் மனித உரிமைகளை'ப் பற்றி துளியளவு பிறர் தெரிய இந்நூல் பயன்படுமேயானால் அதுவே அடியேனுக்குப் போதுமானது.

செ.திவான்
15.5.2004

கல்வித் தந்தை சுலைமான் இல்லம்
வள்ளல் வைகோ நூலகம்,
பாளையங்கோட்டை.

மாநபி(ஸல்) காட்டிய மனித உரிமைகள்

"கலை மறை முஹம்மது என்னுங் காரணம் இல்லையாகில்
உலகு, விண், இரவி, திங்கள், ஒளிர் உடுக்கணம், சுவர்க்கம்,
மலை,கடல், நதி, பாதாளம், வானவர் முதலாய் உம்மை
நிலையுறப் படைப்பதில்லை என இறை நிகழ்த்தினானே"

(உமருப்புலவரின் சீறாப்புராணம்)

அகிலங்கள் அனைத்திற்கும் அருட்கொடையாக அரபு நாட்டிலே தோன்றி அறமுரைத்த அண்ணல், சன்மார்க்கச் சட்டத்தை மனித கோடிகளுக்கான ஒழுக்கமுறையை, உலகம் உள்ளளவும் நீடிக்கவேண்டிய வழிமுறையை வகுத்துத்தந்த வள்ளல்,நிலைகெட்டுப் போய் நின்ற நீதியினை நிமிர்த்திய நீதியரசர், பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசைகளை இகழ்ந்து தள்ளி விட்டுத் தனித்திருந்த தவச் செம்மல், தன் நிலையையும், தன் தலைவனாகிய அல்லாஹ்வின் நிலையையும் இன்ன தென்று உணர்ந்து,உத்தம குணத்தோடும் ஒருவர் மனத்தைக் கலங்கவையாதும் உலகில் வாழ்ந்த உத்தமசீலர், குபிர்க்குலங்களை அறுத்துத் தரும வழிகளை விளக்கி குற்றமிலாது எழுந்து வரும் பூரண சந்திரன், உலகில் பெரும் மார்க்கம் ஒன்றை நிறுவியும், அதனைப் பரப்பியும், ஆற்றல் மிகுந்த அரசியல் தலைவராகவும் அவனியில் ஜொலித்திட்ட அஞ்சாநெஞ்சர், மைக்கேல் ஹெச். ஹார்ட் என்பார் கூறுவாரே, 'சமயம், உலகியல் ஆகிய இருநிலைகளிலும் ஒரு சேர மகத்தான வெற்றி பெற்றவர் வரலாற்றில் (அண்ணலார்) அவர் ஒருவரே', என்று (The 100 - A Ranking of the most influential persons in History, Newyork, 1978, P33) அந்த எம்பெருமான் அஹ்மது முஸ்தபா, முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் 20.4.571 இல் தோன்றி, மனிதராகவே வாழ்ந்து காட்டிய மனித உரிமைகள்...

உரிமை

ஒருவருடைய உரிமை அவருக்குச் சட்டத்தினால் அல்லது தருமநியாயத்தினால் கிடைக்கக்கூடிய ஒரு பாத்தியதையை அவர் கொண்டாடக்கூடும் என்பது; அரசாங்கத்தில் குடிமக்களுக்கு அவரவர் களுடைய

நிலைமைக்குத் தகுந்தபடி உரிமைகள் அமலுக்கு வருகின்றன. ஒருவர் உரிமைகளுக்குக் கெடுதல் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டியது மற்றவர் கடமை. இவ்வாறு சமூகத்தில் ஏற்பட்ட உரிமைகளிலும் கடமைகளிலும் சில சட்டம் பெற்று அமுலுக்கு வருகின்றன. *(கலைக்களஞ்சியம், தொகுதி இரண்டு, சென்னை, 1955, பக் 303)*

மனித உரிமைகள்

ஆறறிவுடைய, அரிய படைப்பாகிய மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்கஉடை,உறங்க உறைவிடம்,பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை, சமயச் சார்புகளின் படி வாழும் வழிபாட்டு உரிமை இவைகளோடு, ஜனநாயக அமைப்பில் ஒவ்வொரு பிரஜையும் உரிமையுடன் வாழ்வாங்கு வாழ்வதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே மனித உரிமைகள் தரப்பட்டு இருக்கின்றன. சட்டமன்றமும், நாடாளுமன்றமும் சட்டங்களை நிறைவேற்றி நாட்டு மக்களுக்கு மனித உரிமைகள் மாண்புற அமைய உதவுகின்றன. அரசுத்துறையினரும் அலுவலர்களும் அதனை நடைமுறைப்படுத்துகின்றனர். சில வேளைகளில் சரிவர அதனை அவர்கள் நிலைநிறுத்தாது போனால், நீதிமன்றங்களை நாடவேண்டிய நிலை நாட்டோருக்கு ஏற்படுகிறது. இந்தியத்திருநாட்டில் தேசிய மனித உரிமைக்கமிஷன் எனும் அமைப்பு செயல்படுகிறது.

ஐ.நா.அமைப்பு

இரண்டாம் உலகப்போர் இவ்வுலகைச் சீரழித்த வேளை; பிரிட்டன்,சீனா, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய வல்லரசுகளின் வெளி நாட்டமைச்சர்கள் 30.10.1943 இல் மாஸ்கோவில் கூடி, உலகநாடுகளின் கூட்டுறவு அமைப்பின் அவசியத்தை அறிவித்தார்கள். 1943 டிசம்பரில் டெஹ்ரானில், ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் கூடி மாஸ்கோ முடிவை விரிவாக்கினார்கள். 1944 இல் டம்பார்ட்டன் ஒக்ஸ் (Dumbartonoaks) பண்ணையில் (அமெரிக்க வாஷிங்டனைச் சேர்ந்த பகுதி இது) ஆகஸ்ட் 21 இல் துவங்கி, அக்டோபர் 7 வரை நடத்தப்பெற்ற மாநாட்டில் மனித உரிமைகளையும்

அடிப்படைச் சுதந்திரங்களையும் மேம்படுத்த வேண்டுமென்ற குறிக்கோள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. 1941 ஆகஸ்டில் அட்லாண்டிக் பெருங்கடலில் கப்பல் தளத்தில் உதயமான எண்ணம், 1945 அக்டோபர் 24 இல் அமைப்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பாக உருவெடுத்தது.

மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிவிப்பு

மனித உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆணையம் (U.N.Human Rights Commission) 1945 இல் நிறுவப்பெற்றது. மனித உரிமைகளையும், சுதந்திரங்களையும், திட்டவட்டமாக வரையறுத்துக்கூறும் மனித உரிமைகளின் பன்னாட்டு மசோதா (International Bill of Human Rights) ஒன்றை தயாரிக்கும் பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மசோதாவின் முற்பகுதி தான் மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை (Universal Declaration of Human Rights)ஆகும் . Human Rights, A Compilation of International Instruments of the United Nations UN publication, sales no.E.83 XIV.I) இதனை 1948 டிசம்பர் 10 இல் ஐ.நா.பேரவை ஒரு மனதாக ஏற்றுக் கொண்டது.

ஐ.நா.அறிவித்த மனித உரிமைகள்

"உயிர் வாழும் உரிமை, சுதந்திர உரிமை, பாதுகாப்பு உரிமை அனைவருக்கும் உண்டு. யாரையும் அடிமையாக வைத்திருக்க முடியாது ; யாரையும் சித்திரவதை செய்யவோ, தண்டனைக்கு உட்படுத்தவோ கூடாது. காவலில் வைக்கவும் நாடு கடத்தவும் கூடாது. அனைவரும் சட்டத்தின் முன் சரி சமம், எவ்வித வேறுபாடுமின்றி சட்டத்தின் முன் சமபாதுகாப்பு பெற அனைவருக்கும் உரிமையுண்டு. ஒவ்வொரு நாட்டிலும், எங்கும் செல்வதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு; நாட்டை விட்டு வெளியே போகவும், திரும்பி வரவும் அனைவருக்கும் உரிமை உண்டு. எண்ண, மனச்சான்று, மதஉரிமை,கருத்து, பேச்சு உரிமை, கல்வி உரிமை, தனக்கும் தன் குடும்பத்திற்கும் நலமும் வளமும் அளிக்கப் போதுமான வாழ்க்கைத் தரம் பெறும் உரிமை

ஒவ்வொருவருக்கும் உண்டு". இது ஐ.நா. பொதுப்பேரவையில் நிறை வேற்றப்பட்ட மனித உரிமைகள் பற்றிய அறிவிப்பில் உள்ளது. *(அ.சுப்பையா, மனித குடும்பத்தின் மாற்ற முடியாத உரிமைகள், சிதம்பரம் 1989 பக் 51,52.)*

வரலாற்றில் மனித உரிமைகள்

இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஹென்றி (1100 - 1135) தமது பிரஜைகளுக்கு உரிமைகள் வழங்கி தாமாகவே ஒரு ஆணையிட்டார். *(இங்கிலாந்து தேச சரித்திரம், சுதேச மஹா சர்வ கலாசாலை ,சென்னை வெளியீடு, 1929, பக் 123, 124).* இங்கிலாந்தின் மன்னர் ஜான் (1199-1216) காலத்தில், ஸ்டீஃபன்லாங்டன் தலைமையில் கூடிய பிரபுக்கள், முதலாவது ஹென்றியின் காலத்தில் அளிக்கப்பட்ட உரிமைகளை, சாசனம் போன்ற ஆவணமாக்கி மன்னரிடம் கையொப்பம் பெற முயன்றனர்.

மகாசாசனம்(Magna carta) (The Great Charter)

1215 ஜூன் 15 இல் ரன்னிமீடு (Runny mede) எனுமிடத்தில் ஓர் சாசனத்தில் மன்னரிடம் ஒப்புதல் வாங்கினர். மன்னர் ஜானுக்கு கையெழுத்துப் போடத் தெரியாமையால் அவருடைய முத்திரை அச்சாசனத்தில் இடப்பட்டது. *(கே.கே.பிள்ளை, இங்கிலாந்து வரலாறு, சென்னை, 1978, பக் 170)* அது மனித உரிமைகள் பற்றிய மகாசாசனமாக , ஆங்கிலேயருடைய மூலாதாரமான பிரஜா உரிமைகளைத் தெளிவாக விளக்கியுள்ளது. இன்றும் அதனையே அடிப்படையாக ஆங்கிலேயர்கள் கொண்டுள்ளனர்.

தாமஸ்பெயின் (Thomas Paine)

அமெரிக்கா குடியரசு பெற்றிட, ஜார்ஜ் வாஷிங்டன் வாளேந்திப் போர் புரிந்தார்; குடியரசையும் , மக்களின் உரிமைகளையும் பெற்றிட தாமஸ்பெயின் பேனா ஏந்திப்புரட்சி செய்தார். சாமான்ய அறிவு (Commonsense) எனும் சிறுநூலை எழுதினார். மக்களின் உரிமையை, விடுதலையை வலியுறுத்திய அந்த நூல் 10.1.1776 இல் வெளியிடப்பட்டது. அந்நூல் 25 லட்சம் மக்கள் வாழ்ந்த நாட்டில் 5 லட்சம் பிரதிகள் விற்றது.

அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்

தாமஸ் பெய்னின், 'சாமான்ய அறிவு' நூல் வெளி வந்த ஆறு மாதங்களுக்குப் பின்னர் தான், அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் கையெழுத்தாயிற்று. 1776 ஜூலை 4 ஆம் நாள் சுதந்திர அறிவிப்புப் பத்திரத்தை (Declaration of Independence) வெளியிட்டனர். 33 வயதான இளைஞர் தாமஸ் ஜெஃபர்சன் (Thomas Jefferson) அதில் மனித உரிமைகள் பற்றி விரிவாகவே விளக்கியுள்ளார். *(கு.நம்பி ஆரூரன், அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு, சென்னை, 1977, பக் 88)*

நடைமுறையிலா? நாசப் பாதையிலா?

"எல்லா மனிதர்களும் சமமாகப் படைக்க பட்டிருக்கிறார்கள்; படைத்தவனால், அவர்களுக்குப் பறிக்கப்படமுடியாத சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. வாழ்க்கை உரிமை, சுதந்திர உரிமை, மகிழ்ச்சியை நாடும் உரிமை ஆகியவை இவற்றுள் அடங்கும். இவ்வுரிமைகளை அடைவதற்காகவே மக்களிடையே அரசுகள் நிறுவப்படுகின்றன. அரசுக்கு; ஆளப்படுபவர் களுடைய அனுமதியுடன் நியாயமான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. எந்த அரசும் இந்த இலட்சியங்களை மதிக்காது அழிக்க முற்பட்டால், அவ்வரசை மாற்றியமைத்துப் புதிய அரசை நிறுவிட மக்களுக்கு உரிமை உண்டு. அரசின் அடிப்படைக் கொள்கைகளும் நிர்வாக சக்திகளும் மக்களுக்கு நலனையும் மகிழ்வையும் அளிக்கக் கூடியனவாக இருக்க வேண்டும். இவ்உண்மைகளைச் சிறப்பு மிக்கனவாக நாங்கள் மதிக்கிறோம்" என்று ஜெஃபர்சன் அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தில் அன்று அறிவித்தார். ஆனால் இன்று அது நடைமுறையில் உள்ளதா? அல்லது நாசப்படுத்தப்பட்டு விட்டதா? நாட்டோர் கண்டு கொண்டு தான் இருக்கின்றனர்.

மாபெரும் உண்மை

வரலாற்றில் மனித உரிமைகள் குறித்த பிரகடனங்கள் பற்றிய செய்திகளைப் பார்க்கிறோம். ஆனால், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே

அரேபியாவில் தோன்றிய அண்ணலார் (ஸல்) தனது வாழ்வில் காட்டி விட்டுச் சென்ற மனித உரிமைகள், மனித குலத்தையே வியப்பில் ஆழ்த்திடும் மாபெரும் உண்மைகளன்றோ! இதோ! அது குறித்த சரித்திரச் செய்திகள்....

செய்யுந்தொழில்

'ஒன்று தெய்வம் ஒன்று மதம் ஒன்று மக்கள் சாதிஎன நன்றுரைத்துஅவை குன்றின் மேலிட்ட விளக்கெனக் காத்திட்டவர் அண்ணலார் (ஸல்)'.

"வாய்ந்த மனை சுத்தி செய்தல், மாடு ஆடு பால் கறத்தல்
ஓய்ந்த கந்தை தோய்த்தல், தைத்தல், ஊராருக்கு ஏவல் செய்தல்,
தேய்ந்த செருப்பொக்கிடுதல், தீமூட்டல், அட்டல் வெட்டல்
ஏய்ந்த தொழில் ஆதி பண்ணும் இச்சை நிலை நச்சேமோ
இன்ப நபி நாயகமே இச்சை நிலைநச்சேமோ" என்று சதாவதானி செய்கு தம்பிப் பாவலர், 'நபிகள் நாயக மான்மிய மஞ்சரியில்' பாடியுள்ளார். எத்தகைய சிறுகாரியமும் மாநபி(ஸல்) பார்வையில் அற்பமாய்ப் படுவதில்லை.

சரிநிகர்சமானம்

ஒரு மனிதன் செய்து வரும் தொழிலைக் கொண்டே அவனது மேன்மையோ, தாழ்மையோ உண்மையில் உள்ளவாறு தீர்மானிக்கப் படமாட்டாதென்னும் மெய்மையினை எம்பெருமானாரவர்கள் தங்களது சொந்தச் செயல்களினால், நடவடிக்கைகளால் நிரூபணம் செய்து காண்பித்துச் சென்றார்கள். கூலிக்காரன், கோடாலிக்காரன், கிணறுகளிலிருந்து தண்ணீர் தூக்கி வரும் காவடிக்காரன், கோடீஸ்வரன் ஆகிய அனைவரும், ஏன் அரசரும் ஆண்டியும்சரிநிகர் சமானம் என்ற சரித்திரத்தை உருவாக்கித் தந்தவர் பெருமானார் (ஸல்).

பத்ருப்போரில்

மதினாநகருக்கு மேற்கில் 120 கி.மீ தூரத்தில் உள்ள கிராமம் பத்ரு. 313 தோழர்களுடன் ஹிஜ்ரி 2 ரமலான் 9 அன்று (கி.பி.5-3-624) மதீனாவிலிருந்து

புறப்பட்டார்கள் அண்ணலார் (ஸல்). போருக்குச் செல்லும் முஸ்லிம்களிடம் வாகனவசதியும், போர்த்தளவாடங்களும், போதுமானதாக இல்லை. மூன்று பேருக்கு ஒரு ஒட்டகை வீதமே இருந்தது; முறை வைத்து மூவர்கள் ஒரு ஒட்டகத்தில்மாறி மாறி சவாரி செய்து வந்தார்கள்.

சமஉரிமை தந்த செம்மல்

அப்போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கும், அபூலுபானாகு (ரலி) ஹஸ்ரத்அலி (ரலி) ஆகியமூவருக்குமாக ஒரு ஒட்டகை கிடைத்தது பெருமானார் (ஸல்) நடந்து வரக்கூடிய முறை வரும் போது அண்ணலார் நடந்திடக்கூடாது என்று அபூலுபானாவும், ஹஜ்ரத் அலீயும் வற்புறுத்தி னார்கள்;எவ்வளவோ வேண்டினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) ஒழுங்கு முறைப்படி நடந்தே சென்றார்கள். *(மு.ந.முஹம்மதுசாஹிப், திரு நபி சரித்திரம், திருநெல்வேலி 1969, பக் 126)* அனைவரும் சமம் என உரிமை தந்த செம்மல் அதே போர்க்களத்தில் இன்னொரு சரிதமும் படைத்தார்கள்.

முஸ்லிம் ராணுவ அணியினை பெருமானார் (ஸல்) நேர் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வரிசையில் சரியாக நிற்காத ஒருவரை சரி செய்வதற்காக அவரின் வயிற்றில் குத்தி விட்டார்கள். அந்த ராணுவ வீரர் 'யாரஸூலுல்லாஹ், நீங்கள் உங்கள் கரத்தால் என்னைத் துன்புறுத்தி விட்டீர்கள்' எனப் புகார் செய்தார். உடனே அண்ணலார் (ஸல்) தனது வயிற்றின் மீதுள்ள துணியை நீக்கி விட்டு,"நான் அதற்காக மிகவும் வருந்துகிறேன்; நான் செய்தது போலவே நீங்களும் செய்து என்னைப் பழி தீர்த்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். அவரோ அண்ணலார் வயிற்றில் முத்தமிட்டு இது தான் நான் விரும்பியது என்றார். *(மௌலானா ஸையத் அபுல் அஃலா மௌதூதி, இஸ்லாத்தில் மனித உரிமைகள், தமிழாக்கம், ஹில்மி, சென்னை 1986 பக் 64)* அனைவருக்கும் சமஉரிமை தந்த செம்மல் அண்ணலார் (ஸல்) என்பதற்கான சான்றுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். அதன் வழியே மாநபி காட்டிய மனித உரிமைகளை மறைவின்றி அறியலாம்.

தனி மனித சுதந்திரத்திற்கான பாதுகாப்பு

ஒரு சமயம், பள்ளி வாசலில் பெருமானார்(ஸல்) சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த வேளை, ஒருவர் எழுந்தார், 'அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய அண்டைவீட்டுக்காரர்கள் என்ன காரணங்களுக்காக கைது செய்யப் பட்டுள்ளார்கள் ?' என்று கேட்டார். அதனை அண்ணலார் (ஸல்) காதில் வாங்கிக் கொண்டே தனது உரையினைத் தொடர்ந்தார்கள். அந்த மனிதர் மீண்டும் எழுந்தார். அதே கேள்வியை மீண்டும் கேட்டார் பதிலேதும் சொல்லாமல் பெருமானார் (ஸல்) தனது பேருரையைத் தொடர்ந்தார்கள். திரும்பவும் அதே மனிதர் எழுந்தார்,மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டார். அப்பொழுது அண்ணலார் (ஸல்) கேள்வி கேட்டவரின் அண்டை வீட்டாரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்கள். காவல் துறை அதிகாரி அந்தப் பள்ளி வாயிலில் தான் இருந்தார். கைதிற்கு சரியான காரணங்கள் இருந்திருந்தால் அவ்வதிகாரி எழுந்து தனது நிலையை விளக்கியிருப்பார். காரணம் சொல்லாமல் மௌனமாக அந்த அதிகாரி இருந்ததால், அண்ணலார் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய உத்திரவிட்டார்கள் *(முற்கூறிய அதே நூல் பக்கங்கள் 42-44)*

"மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால், பாரபட்சமின்றி நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்" (அல்குர்ஆன் 4.58) *(ஆ.கா அல்லாமா அப்துல் ஹமீது பாகவி, தர்ஜுமெதுல்குர்ஆன், 1986 சென்னை பக் 103)* எனும் தித்திக்கும் திருமறையாம் திருகுர் ஆன் காட்டும் வழியிலே, தீன் நெறிகாட்டிட வந்த அண்ணலார் (ஸல்) உங்களுக்கு மத்தியில் நான் நீதி செலுத்துமாறு கட்டளை இடப்பட்டுள்ளேன் என மொழிந்துள்ளார்கள் அவ்வாறே தனிமனித சுதந்திரத்திற்கான பாதுகாப்பு உரிமையை தரணிக்குக் காட்டிச சென்றார்கள்.

அகழிச் சண்டையில் அகிலத்திற்கு காட்டியது

கி.பி.626 இல் நடைபெற்ற 'கஸ்வத்துல் அஹ்ஜாப்' எனும் அகழிச்சண்டை குறித்து (கந்தக்) திருகுர்ஆனில் 'ஸூறத்துல் அஹ்ஜாபி' யிலும் கூறப்

பட்டிருக்கிறது. பாரசீக வழக்கமான அகழி வெட்டுதலை ஸல்மானுல்பாரிஸி (ரலி)யின் ஆலோசனையை ஏற்று, (உடனிருக்கும் தோழர்கள் நல் ஆலோசனையைக் கூறிட உரிமை உண்டு என்பது இதனால் தெளிவாகிறது) மதீனாவில் இயற்கைப் பாதுகாப்பாக வுள்ள மலைகளைத் தவிர்த்து மலை இல்லாத இடத்தில் அகழியை வெட்டுமாறு அண்ணலார் (ஸல்) கட்டளையிட்டதுடன் நில்லாமல், தோழர்களுக்கு உற்சாகமூட்டுவதற்காகவும், கடமை உணர்வுடனும் அகழி வெட்டும் வேலையில் தாங்களும் நேர்முகமாகக் கலந்து கொண்டார்கள். அகழி தோண்டும் போது (ஸல்) பசியை அடக்குவதற்காகவோ, அல்லது பசியின் காரணமாக கூனல் ஏற்படாதிருப்பதற்காகவோ வயிற்றில் கல்லை வைத்துக் கட்டி இருந்தார்கள்; அப்போது மூன்று நாட்கள் நபித்தோழர்கள் பட்டினியாயிருந்தனர். ஆக அண்ணலார் (ஸல்) தலைவர் என்று தனித்திராமல், அனைவரையும் போலவே பணியாற்றினார்கள்; பட்டினியோடும் இருந்தார்கள்; பாரினில் அனைவரும் சமமென பறைசாற்றிச் சென்றார்கள். *(மௌலவி S.S.முஹம்மது அப்துல்காதிர்பாகவி, ஹலரத் முஹம்மத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், இரண்டாம் பாகம், உத்தமபாளையம்,1964 பக்கங்கள் 194, 197)*

அகிலத்தை வியப்பில் ஆழ்த்திடும் அரியசாசனம்

நபிகள் பிரான் (ஸல்) மதீனாவிற்கு வந்த போது, அன்ஸாரிகள் (ஔஸ், கஸரஜ் குடும்பத்தவர்கள்) யூதர்கள் (பனூநுலைர், பனூானகன்கா, பனூகுறைலா குடும்பத்தவர்கள்) முனாபிக்குகள் (நயவஞ்சகர்கள்) என மக்கள் மூன்று பிரிவினராக இருந்தனர். மதீனாவிலுள்ள எல்லா மக்களையும் ஒரு சாசனத்தின் மூலமாகக் கட்டுப்படுத்தி மாநபி (ஸல்) தந்த சாசனம் அகிலத்தை வியப்பில் ஆழ்த்திடும் அற்புதமாகும்.

“உடன்படிக்கையைக் காப்பாற்றாதவன் மதமற்றவன்” என்று பெருமானார் (ஸல்) கூறியுள்ளார்கள். நண்பன், விரோதி என்னும் வித்தியாசமின்றி உடன்படிக்கை, வாக்குத்தத்தம் இவைகளைப் பெருமானார்

(ஸல்) பூர்த்தி செய்து வந்தார்கள். (ஸையத்இப்ராஹீம், இஸ்லாமிய சரிதை, முதற்பாகம், பாளையங்கோட்டை, 1934, பக் 193) மதீனாவில் மாநபி (ஸல்) தந்த சாசனத்தில் 'எல்லோரும் ஒரே நாட்டினராகக் கருதப்படுவார்கள்', 'யூதர்கள் தங்கள் மதத்தை அனுஷ்டித்துக் கொள்ளப் பூரண உரிமை உண்டு. மதீனாவை அன்னியர்கள் தாக்கினால் யூதர்களும் முஸ்லீம்களும் சேர்ந்து கொள்ள வேண்டும்; குற்றஞ்செய்தவன் யூதனா யிருந்தாலும், முஸ்லிமாயிருந்தாலும், பணக்காரனாயிருந்தாலும் ஏழையா யிருந்தாலும் ஒரே தண்டனையே விதிக்கப்படும்" *(மௌலவி தொ.கு.அப்துல் கரீம்பாகவி, திருமதீனாவின் சரித்திரம், பள்ளப்பட்டி 1961, பக் 100)* மாநபி (ஸல்) மதீனாவில் மனித இனத்திற்கு காட்டிய மனித உரிமைகள் மலைக்க வைக்கின்றதல்லவா!

சமாதானத்தூதர் - பிறமதப் பாதுகாவலர்

ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் மதீனாவாசிகளுக்கும், மக்காவாசிகளுக்கு மிடையே, சமாதானத்தை நிலை நிறுத்த ஹுதைபிய்யா உடன் படிக்கை கண்டவர்கள் அண்ணலார் (ஸல்). சமாதானத்திற்காகப் பாடுபடுவதும், விட்டுக் கொடுப்பதும் மாநபிகாட்டிய மனித உரிமைகளில் ஒன்றாக ஜொலிக்கிறது. கிறிஸ்தவர்களுக்கும், சீனாய் (தூர்சீனா)மலைக்கு அருகில், தூய காதரீன் மடத்து கிறிஸ்தவத்துறவிகளுக்கும் அண்ணலார் அளித்த சாசனம் பற்றி 'மீத்' பிரதேசப் பாதிரியான ரிச்சர்டு போகாத் (Richard Pococke) தனது 'கீழ் நாட்டினுடையவும் இதர தேசங் களினுடையவும் விபரம்' (A Description of the East and other countries) எனும் நூலில் (1743) தெரிவித்துள்ள செய்தி; ஜான் டெவன் போர்ட் (John Davenport) தனது 'Apology for Mohamed' நூலில் காணப்படும் விவரம்; செய்யது அமீர் அலியின் 'Spirit of Islam' நூலில் வரும் செய்தி இதோ அண்ணலார் அறிவிக்கிறார்கள். "கிறிஸ்தவ சந்நியாசிகளில் யாராவது அவர் களுடைய யாத்திரைகளிடையில் ஏதாவதொருமலை, குன்று, கிராமம் அல்லது மனிதர்கள் குடியிருக்கக்கூடிய வேறு ஏதாவது ஸ்தலத்திலாவது, கடலிலாவது ,பாலைவனத்திலாவது ஏதாவதொருமடம்,கோயில் வணக்கஸ்தலத்திலாவது

தங்கும்படி நேரிட்டால், அவர்களுடையவும், அவர்களின் சொத்துக்களினுடையவும் பாதுகாவலனாகவும், இரட்சகனாகவும் எனது உயிர், ஒத்தாசை பாதுகாப்புடன் என் ஜனங்கள் எல்லாருடனும் நான் அவர்கள் என் சொந்த ஜனங்களின் ஒரு பகுதியினராயிருக்கின்றனர்". *(K.T.Mஅஹ்மது இபுராஹீம் ஸாஹிப் BABL, நபி பெருமானவர்களும் பிற மதத்தினரும், திருநெல்வேலி 1945, பக் 18)*அதே நூல் பக்கம் 19 இல், 'அவர்களுடைய கோயில்களை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ள யாருக்கும் உரிமை இல்லை' என்றும் உரிமை வழங்கிய அண்ணலார் காட்டிய மனித உரிமைகளை இன்றைய ஆட்சியாளர்கள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

தண்டனைகள் தந்த போது

அண்ணலார் (ஸல்) குற்றவியல் தண்டனைகளை நிலை நாட்டுவதும் இறைவனின் புனிதச்சட்டங்கள் சீர்குலைக்கப்படும் போது நடவடிக்கை எடுப்பது குறித்ததுமானமான விஷயங்களை அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். "தமக்கிழைக்கப்பட்ட (கொடுமைகளில்) எதற்காகவும் தமக்கென்று எவரையும் எப்போதும் அவர்கள் பழிவாங்கியதில்லை; அல்லாஹ்வின் புனிதச்சட்டங்கள் சீர்குலைக்கப்பட்டு (அதற்காக) அல்லாஹ்வின் சார்பாகப் பழிவாங்க வேண்டுமென்று இருந்தால் தவிர. *(நபிகளாரின் பொன்மொழிகள், ஸஹீஹுல்புகாரி, ஏழாம் பாகம், ரஹ்மத் அறக்கட்டளை வெளியீடு, 2001 பக் 281)* மனிதன் பழி வாங்கும் போக்கிலிருந்து தவிர்த்தல் வேண்டுமென்பது மாநபி (ஸல்)காட்டிய மனித உரிமைகளில்(நேயத்தில்) ஒன்றாகும்.

குலம் கோத்திரம் உயர்வல்ல

" நீங்கள் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்வதற்காக வேண்டி தனித்தனிப் பிரிவுகளையும் கோத்திரங்களையும் உண்டாக்கினோம். அல்லாஹ் விடத்தில் உங்களில் கௌரவமிக்கவன் உங்களில் பயபக்தி அதிகமுள்ளவனாவான்" (திருகுர் ஆன் 49:13)

இதில் குலம், கோத்திரத்தின் மூலம் மனிதன் கர்வம் கொள்வது பயனில்லை என்றும், பக்தியின் மூலமேதான் இறைவனிடம் மதிப்பு உயர முடியும் என்று விளக்கப்படுகிறது *(மௌலவி E.M. அப்துர் ரஹ்மான், அன்வாறுல் குர்ஆன், ஹாமீம், காலபமா தமிழ் தப்ஸீர், கூத்தாநல்லூரர் 1994 பக் 158)*

மினாவில் ஹிஜ்ரி 10, துல்ஹஜ்ஜு பிறைபத்தில் நபிகளார் (ஸல்) ஆற்றிய பிரசங்கத்தில்,"ஒரு குற்றத்திற்கு அதைச் செய்பவனையன்றி வேறுயாரும் பொறுப்பாளியல்லர்; ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் சகோதரனாவான்" என்று குறிப்பிட்டார்கள்; மறுநாளில் அங்கு ஆற்றிய உரையின் போது, "அரபியானவர் அரபி அல்லாதவரை விட எந்த வகையிலும் உயர்ந்தவரல்லர் ; அதுபோன்றே அரபி அல்லாதவர் அரபியை விட எந்த வகையிலும் உயர்ந்தவரல்லர். அது போன்றே சிவப்பு நிறத்தான் கருப்பு நிறத்தானை விடவோ, கருப்பு நிறத்தான் சிவப்பு நிறத்தானை விடவோ எவ்வகையிலும் சிறந்தவனல்லன். மிகவும் பயபக்தியுடையவரே உங்களில் சிரேஷ்டமான வராவார்" என்றுரைத்தார். "எல்லோரும் சமம் என்ற ஏற்றத்தாழ்வற்ற நிலையினை நிலை நிறுத்தி தனி மனித உரிமையைக் காட்டிச் சென்றவர்" அண்ணலார்(ஸல்) *(ஆர்.பி.எம்.கனி, எம்பெருமான் பேசுகிறார்கள் சென்னை, பக்கம் 129, 132, 133)*

அடிமைத்தளை அறுத்த அண்ணலார் (ஸல்)

உலகப் பொதுமறையாம் திருகுர்ஆனின் தெளிவுமிக்க விளக்கங் களாகவே அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவை அமைந்துள்ளன. மனித சமுதாயத்திற்கு வழிகாட்டிட வந்த திருத்தூதரை இறைவன் ஓர் அவதாரமாகப் படைத்து விடாமல், மனிதனாகவே பிறக்கச் செய்து, மனிதனாகவே வாழ்ந்திடச் செய்து, மனிதனாகவே மரிக்கவும் செய்தான். முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய மாநபி(ஸல்) மனித சமுதாயம் அனைத்திற்கும் மகத்தான உரிமைகளை காட்டிச் சென்றார்.

டி.ஜி.ஹோகார்த்

பெருமானார் (ஸல்) அவர்களுடைய அன்றாட நடை, உணவு, பாவனைகள், அவை பெரியவையோ, சிறியவையோ, அனைத்தும் சமயச் சட்டமாக்கப்பட்டுக் கோடிக்கணக்கானவர்களால் கவனமாகப் பின்பற்றப் படுகின்றன. மனித இனத்தின் எந்தப் பிரிவினராலும், பரிபூரணமான மனிதர் என்று கருதப்பட்ட எவரும் இவ்வளவு, நுணுக்கமாகப் பின்பற்றப்பட்டதில்லை என்று வியக்கிறார் வரலாற்றறிஞர் டி.ஜி.ஹோகார்த்.

ஒவ்வொரு மனிதனுக்கும் எந்தெந்த உரிமைகளுக்கு இயற்கையாகவே உரிமை உண்டோ, எந்தெந்த உரிமைகள் பாதுகாப்புக்கு உரியனவோ அவற்றையே மனித உரிமைகள் என்று வரையறுக்கிறார்கள்.

'விடுதலைப்பிரகடனம்' ஒரு புறம் இருந்தும் கூட அமெரிக்காவில் 'ஜனநாயகக் குடியரசு' அரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட 75 ஆண்டுகளுக்குப் பிறகு கூட அடிமை முறை இருந்தே வந்தது என்பதனை அறிகிறோம்*(அர்ஜுன் தேவ், இந்திரா அர்ஜுன்தேவ், கப்தாதாஸ், தமிழாக்கம் நாக.வேணுகோபால், மனிதஉரிமைகள், ஒரு அடிப்படை நூல், புதுதில்லி, 2002 பக்* XI, XII*)*

அண்ணலார் (ஸல்) அடிமைகளின் உரிமைகளைப் பேணிடவும், அடிமைகளை விடுவிப்பதிலும் எவ்வளவு ஆர்வம் காட்டினார்கள் என்பதனை அவர்களது வாழ்க்கைச்சம்பவங்கள் நமக்கு அறிவிக்கின்றன.

அபூதர்ரில் கிபாரி (றளி)

மாநபி (ஸல்) முன்னிலையில், அபூதர்ரில் கிபாரி(றளி) அவர்களுக்கும், அபீஸீனியாவைச் சேர்ந்த ஒரு கறுத்த அடிமைக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது; தர்க்கம் சூடு பிடித்து முற்றியது; இருவருக்கும் கோபம் மேலிட்டது. கோபத்தால் நிதானமிழந்த அபூதர் (றளி) 'ஏ! கறுப்பியின் மகனே' என்று அபீஸீனிய அடிமையைப் பார்த்து கூறிவிட்டார். இதைக் கேட்ட அண்ணல் நபி(ஸல்) அவர்கள், 'உமதுபேச்சு எல்லை மீறி விட்டது! இறை பக்தியாலன்றி

கறுத்த பெண்ணின் மகனை விட வெள்ளைப் பெண்ணின் மகனுக்கு எவ்வித சிறப்பும் இல்லை' எனக்கூறி தோழர் அபூதரைக் கண்டித்தார்கள்.

அபிஸீனிய அடிமை

அண்ணலாரின் (ஸல்) எச்சரிக்கையினால் தாம் செய்த தவறை உணர்ந்த அபூதர் மனம் வெதும்பினார்; உடனே நிலத்தில் தமது கன்னத்தை வைத்துப் படுத்துக்கொண்டு "நான் செய்த இந்தத் தவறுக்காக உமது காலால் என் கன்னத்தில் உதைப்பீராக" என்று அபிஸீனிய அடிமையிடம் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அண்ணலார் (ஸல்) முன்னிலையில், ஓர் அடிமை தன் உரிமைக்காக மற்றவர்களுடன் சமமாகப் போராடக்கூடிய நிலையினையும், நிறத்தால் உயர்வு தாழ்வு இல்லை என்ற நிலையினையும் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே அண்ணலார் (ஸல்) அகிலத்திற்கு காட்டிச் சென்றார்கள். *(அஷ்ஷைய்க், ஏ.ஆர்.எம்.ரூஹுல்ஹக், இஸ்லாம் தந்த மனித உரிமைகள், ஹிஜ்ரி 1420, பக் 7,8.)*

அடிமைக்கு உரிமை வழங்கிட

ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து 'எனக்கு நானே தீங்கிழைத்துக் கொண்டேன்' என்று கூறினார். அதற்கு அண்ணலார் (ஸல்)' நீர் செய்த தீங்கு என்ன?' என்று வினவினார்கள். அவர் 'நான் புனித ரமளானிலே நோன்பு நோற்றிருக்கிற நிலையிலே , என்னுடைய மனைவியுடன் தாம்பத்திய உறவு கொண்டு விட்டேன்' என்று கூறினார்.

அதற்கு மாநபி (ஸல்) இந்த குற்றப்பரிகாரமாக , 'ஓர் அடிமையை நீ உரிமை விட வேண்டும்' என்றார்கள்; மேலும் நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் அணியும் ஆடையையே அடிமைகளுக்கும் அணிவியுங்கள் என்றும் அண்ணலார் (ஸல்) அறிவுரை தந்தார்கள்.

'ஓர் அடிமையை விடுதலை செய்பவரின் ஒவ்வொரு உறுப்பும் அவன் விடுவித்த அடிமையின் ஒவ்வொரு உறுப்பிற்கு பகரமாக நரக நெருப்பிலிருந்து காப்பாற்றப்படும்' என இஸ்லாம் அறிவுறுத்துகிறது.

ஒரே விதை

'உங்கள் அடிமை என நீங்கள் அழைக்கும் மனிதன் ஒரே விதையிலிருந்து பிறந்தவன் தான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள் ; அவனுக்கு மேலே இருப்பதும் ஒரே வானம் தான்; "உங்களைப் போலவே அவனும் மூச்சு விடுகிறான்; உங்களைப் போன்று தான் அவனும் சாகின்றான்! அவனை விடுதலை செய்யுங்கள்", என்று கி.பி. 65-66 இல் செனிக்கா லூசிலியசுக்கு எழுதிய கடிதத்தில் கோரியிருந்தார். *(யுனெஸ்கோ கூரியர், டிசம்பர் 1994, பக் 10.)*

அண்ணலார் விடுவித்த 63 அடிமைகள்

பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமே ஏறத்தாழ 63 அடிமைகளை விடுவித்தார்கள். அவரது துணைவியார் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் விடுவித்த அடிமைகளின் எண்ணிக்கை 67. *(அ.ஷம்சியா பேகம், மணிச்சுடர் ரமளான் சிறப்பு மலர், நவம்பர் 2003 , பக் 66.)*

அடிமைகளின் உரிமைக்காக

அடிமைகளின் உரிமைக்காக அண்ணலார் (ஸல்) அகிலத்திற்கு காட்டிச் சென்ற வழிமுறைகள், அவர்களைத் தொடர்ந்து கலீஃபாக்களின் ஆட்சிக்காலத்தில் அரபு நாட்டிலுள்ள அடிமைகள் விடுவிக்கப்பட்ட வரலாற்றுச் செய்திகள் உலகம் உணர வேண்டியவைகள் ஆகும்.

கருத்துச் சுதந்திரம் காத்த காருண்யர்

மனித உரிமைகளில் மிக முக்கியமானது கருத்துச் சுதந்திரம் ஆகும். தவறுகள் நடக்கும்போது அவற்றைச் சுட்டிக்காட்டும் உரிமை மகத்தான ஒன்றாகும்.

அறப்போர்

நபித்தோழர் தாரிக் பனி ஷி ஹாப் (ரலி) அவர்கள் கூறியதாவது : நபி (ஸல்) அவர்களிடம், ஒரு மனிதர் 'சிறந்த அறப்போர் எது?' என்று கேட்டார்.

அதற்கு அண்ணலார் (ஸல்) கொடுமைக்கார அரசனிடம் சத்தியத்தைக் கூறுவதாகும்'. என்று பதிலளித்தார்கள் *(நஸயீ இப்னுமாஜா, முஸ்னது அஹ்மத்)* இதிலிருந்து, தீமைகளை எதிர்த்துக் குரலெழுப்புகின்ற கருத்துச் சுதந்திரம் என்பது உரிமைமட்டுமல்ல, கடமையும் ஆகும்என்பது தெளிவாகிறது.

அபூசயித்அல்குத்ரீ (ரலி)

"உங்களில் ஒருவர் ஒரு தீமையைக் கண்டால், அவர் அதைத் தமது கரத்தால் தடுக்கட்டும், முடியாவிட்டால் நாவால் சொல்லித் தடுக்கட்டும், அதுவும் முடியாவிட்டால் உள்ளத்தால் வெறுத்து ஒதுக்கட்டும்;" என்று அண்ணலார் (ஸல்) அறிவித்ததை தான் கேட்டதாக அபூசயித்அல்குத்ரீ (ரலி) அறிவித்துள்ளார்கள். *(அஃப்ஸலுல் உலமா மௌலவி அ.முஹம்மதுகான் ஃபாஸில் பாகவி, ஸஹீஹ் முஸ்லிம், முதல்பாகம், 2003, பக் 98,99)*

டெமாஸ்தனிஸ்

ஆதி நாட்களைச் சேர்ந்த கிரேக்கர்களும், ரோமானியர்களும் பேச்சுரிமைக்கு ஆதரவாக அழகான சொற்களைப் பயன்படுத்தினர். டெமாஸ்தனிஸ் கூறுகையில், 'பேச்சுரிமை மறுக்கப்படுவதை விட மக்களுக்குப் பெருங்கேடு வேறு எதுவும் இருக்க முடியாது'என்றார். எனினும் கிரேக்கத்தில் நிறைய சுதந்திர உரிமைகள் நிலவிய காலங்களில் கூட ஒருவர் அச்சமின்றி சுதந்திரமாகத் தனது கருத்துக்களை வெளியிடவோ, எழுதவோ முடிந்ததாகக் காட்டச் சான்றுகள் இல்லை.

சாக்ரடீஸ்

ஆட்சிக்கு எதிரான கருத்துக்களைக் கூறியதாகச் சொல்லி தத்துவஞானி சாக்ரடீஸை சுதந்திரவிரும்பிகளான ஏதென்ஸ் மக்கள்எவ்விதம் தண்டித்தனர் என்பதனை விவரித்தவர் பிளட்டோ.

பிளட்டோ

ஆனால் அதே வேளையில் சாக்ரடீஸின் மாணவரான பேரறிஞர் பிளட்டோ தனது வாழ்வில் தணிக்கை முறையை ஆதரித்தவர்; ஆட்சியாளர் அனுமதிக்கிற சட்டப்படியாக எழுத வேண்டும் என்ற கொள்கை உடையவர்.

ஜான் மில்டன்

புகழ்பெற்ற கவிஞன் ஜான்மில்டன் தனது ‘ஆரியோபாகிடிகா’ (நீதிமன்றம்) என்ற கவிதையில், (கி.பி.1644) ‘எனக்கு மற்ற எந்த உரிமையையும் விட என் மனச்சாட்சிக்கு ஏற்பப் பேசவும், வாதிக்கவும் அறியவும் உரிமையைக் கொடு’ என்று முழங்கினார். ஆனால் அதே வேளையில் கிராம்வெல்லின் அடக்குமுறை ஆட்சியில் அரசின் தணிக்கை அதிகாரியாகப் பணிபுரிந்தவர் மில்டன். *(பிரிட்டனைச் சேர்ந்த ஹெலன்டார் பிஷையர், சுதந்திரமான பேச்சுரிமை, மக்களாட்சியின் காவலன் கட்டுரையில், யுனெஸ்கோகூரியர், மே 1994, பக் 18.)*

கஜாகஸ்தானின் 15 ஆம் நூற்றாண்டுச் சட்டம் ‘ஒரு மனிதனின் தலையை வெட்டலாம் ஆனால் அவனது நாக்கை வெட்டக்கூடாது’ என்று கூறியது. கி.பி. 1721 இல், ‘ஒருவர் தனது நாக்கைத் தன்னுடையது என்று கூறுகின்ற நிலை இல்லை, என்றால், அவருக்கு எதுவுமே சொந்தமில்லை’ என்று தான் பொருள் என்று இங்கிலாந்தில் துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன

வால்டேர்

பதினெட்டாம் நூற்றாண்டின் அறிவு மலர்ச்சிக் காலத்தில், பிரெஞ்சுப்புரட்சியின் போது வால்டேர் ‘உன் கருத்தை நான் எதிர்க்கிறேன் ; ஆனால் அக்கருத்தைக் கூற உனக்கு உள்ள உரிமைக்கு ஆதரவாக சாகும் வரைவாதாடுவேன்’ என்று வாதிட்டார். ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக் காரர்களும், கருத்துச் சுதந்திரம் குறித்து வலியுறுத்தியதையும், ஆனால் அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அண்ணலார் (ஸல்) தனி மனித கருத்துச் சுதந்திரம் காத்திட்ட காருண்யர் என்பதனை அவர்களது வாழ்க்கைச் சம்பவங்கள் அவனிக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன.

பிறமதத்தின்ரிடம் சுதந்திரம்

ஒரே இறைவன் (தவ்ஹீத்) என்கிற கொள்கை தான் சத்தியமானது என்பதில் உறுதியாக இருக்கின்ற இஸ்லாம் மார்க்கமானது, ‘யாரும் விரும்பாதவரை இஸ்லாத்தை அவர்கள் மீது திணிப்பதை அனுமதிக்கவில்லை’.

ஹீஸைனி

மதீனா நகரில்,நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உற்ற தோழர்களாக இருந்தவர்கள் 'அன்சாரிகள்' என்று அழைக்கப்பட்டனர். அன்சாரிகளில் 'பனூசாலிம் பின் அவ்ஃப்' எனும் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஹுஸைனி,இவரது இரண்டுபிள்ளைகளும் யூதர்கள். அறியாமைக்காலத்தில் ஒரு பெண்ணுக்குப் பல தடவை குழந்தை பிறந்து இறந்து போனால், அவள் அடுத்த குழந்தை உயிரோடு வாழ்ந்தால்,அதை யூத மதத்தில் சேர்த்து விடுவேன் 'என்று சபதம் செய்வாள். அதன் படி இஸ்லாம் மார்க்கம் தோன்றியதற்குப் பின்பும் பலர் யூதர்களாக இருந்து வந்தனர்.

ஒரு சமயத்தில் பனூநளீர் எனும் யூதகூட்டத்தார் சதிவேலைகளில் ஈடுபட்டதற்காக மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்டனர். அப்போது அதில் ஹுஸைனீயின் பிள்ளைகளும் இருந்தனர். 'தங்கள் பிள்ளைகளை யூதர்களிடம் விட்டு வைக்க மாட்டோம்; அவர்களை இஸ்லாத்தில் இணைத்தே தீருவோம்' என்றனர் ஹுஸைனீ தம்பதியினர். அப்போது தான் கீழ்க்கண்ட இறைவனின் திருமறைவசனங்கள் இறங்கிற்று. இது இப்னுஜரீர், அபூதாவூத் நூற்களில் காணப்படுகின்றது. *(திருக்குர்ஆன் விரிவுரை, தஃப் சீர் இப்னுகஸீர், முதல்பாகம், சென்னை, 2003 பக் 683-684.)* இதனை ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள் . *(இப்னுஜுரைர்) (அன்வாறுல்குர்ஆன், ஸுரத்துல்பகரா தமிழ்தப் ஸீர்,மௌலவி E.M.அப்துர் ரஹ்மான், 1989, பக் 658.)*

இஸ்லாத்தில் இணையும் விஷயத்தில் வற்புறுத்தல் இல்லை

"இஸ்லாம் மார்க்கத்தில் இணையும் விஷயத்தில் எந்த வற்புறுத்தலும் கிடையாது.நிர்ப்பந்தமேயில்லை வழி கேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (யடைவது எவ்வாறென்று) தெளிவாகி விட்டது"(திருகுர் ஆன் 2:256) *(அல்லாமா ஆகா அப்துல் ஹமீது பாகவி, தர்ஜுமதுல் குர் ஆன், 1986 பக் 50)*

திருகுர்ஆனில், 'இஸ்லாம் மார்க்கத்தில் இணையும் படி யாரையும் வற்புறுத்த வேண்டாம்' என இவ்வசனத்தில் இறைவன் கட்டளையிடுகிறான்.

"மார்க்கத்தில் கட்டாயப்படுத்துதல் கூடாது, எவரையும் வலுக் கட்டாயமாக இஸ்லாமிய மார்க்கத்தில் சேர்த்தல் கூடாது. அதனை அல்லாஹ்வும், அவன் தூதரும் அனுமதிக்கவில்லை என்பது சந்தேகத்திற்கிடமின்றித் தெளிவாகி விட்டது" (தஃப்ஸீர் ஜவாஹிருல்குர் ஆன், முதல் தொகுதி, வேலூர் 1992, பக் 615)

"முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு வாழும் ஒருவருக்கு யார் அநீதி இழைக்கிறாரோ அல்லது அவரது உரிமையைக் குறைக்கிறாரோ, அல்லது அவரது சக்திக்கு மேல் சுமைகளைத் தருகிறாரோ, அல்லது அவரது விருப்பமின்றி அவரது பொருளைப் பறித்துக் கொள்கிறாரோ அத்தகைய முஸ்லிம்களின் மீது மறுமை நாளில் நான் வழக்குத் தொடுப்பேன்" என்று மாநபி (ஸல்) அறிவிக்கிறார்கள். (அபூதாவூத் 2654) மாற்று மதத்தவர் மீது அண்ணலார் (ஸல்) காட்டிய அன்பையும்,அளித்திட்ட உரிமைகளையும் அனைவரும் எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டியது அவசியமன்றோ!

தாயூப் நகரத்தில் கல்லடிபட்ட போதிலும், திருமக்கா நகரில் தலையைத் தரையில வைத்து இறைவனை வணங்கும் வேளையில் ஒட்டகையின் குடலை அள்ளி அவர்களது மேனியிலே வைத்த போதும், அவர்கள் மாற்று மதத்தவரிடம் கோபம் கொள்ளவில்லை; மக்காவின் வெற்றியின் போதும், அட்டகாசம் செய்தவர்கள் சரண் அடைந்த போதும் அவர்கள் பழி வாங்கப்படவில்லை. மாறாக எவ்வித நிபந்தனையுமின்றி அவர்கள் மன்னிக்கப்பட்டார்கள் எதிரிகளிடமும், மாற்றாரிடமும் மாநபி (ஸல்) காட்டிய மகத்தான அன்பினை என்ன வென்று சொல்வது!

சட்டத்திற்கு முன் சமம்

மதீனாவிலிருந்து சிரியா நோக்கிச் செல்லும் வழியில் உள்ள பாலைவனச் சோலை கைபர். ஃபதக் என்பது கைபர் அருகில் உள்ள இடத்தின் பெயராகும். இவ்இரு இடங்களிலும் வசித்து வந்த யூதர்கள் மாநபி (ஸல்) அவர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு சொத்துக்களைக் கொடுத்தனர். மதீனாவின் புறநகர்ப் பகுதியில் வசித்து வந்த பனூநளீர் எனும் யூதக் குலத்தார் பேரீச்சம் தோட்டத்தைக் கொடுத்து சமாதானம் செய்து கொண்டனர்.

ஃபய்உ - ஃகனீமத்

போர் செய்யாமலே எதிரி நாட்டிலிருந்து கிடைக்கும் செல்வம் ஃபய்உ (அல்லாஹ் ஒதுக்கித் தந்தது)ஆகும். ஃபய்உ இல் போராளிகளுக்குப் பங்கு கிடையாது. போரில் எதிரிகள் விட்டுச்செல்லும் பொருள் ஃகனீமத் ஆகும். இதில் போராளிகளுக்கு 5 இல் 4 பங்கு உண்டு. அது ஆட்சியாளரின் பொறுப்பில் சிறப்புநிதியாக இருக்கும் (உம்தத்துல் காரீ) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்து விட்ட பிறகு மாநபி (ஸல்) அவர்களின் மகளார் ஃபாத்திமா அவர்கள் தமக்குச் சேர வேண்டிய வாரிசுச் சொத்தைப் பங்கிட்டுத் தரும்படி கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நபி மார்களான எங்கள் சொத்துகளுக்கு வாரிசாக யாரும் வர முடியாது. நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம் தருமம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள் என்பதனை கலீபா அபூபக்கர் (ரலி) எடுத்துக் கூறி ஃபாத்திமாவின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களுக்குப்பிறகு ஆறு மாதங்களே வாழ்ந்த ஃபாத்திமா, கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களுடன் அதனால் தான் மரணிக்கும் வரைபேசுவதையே நிறுத்தி விட்டார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களின் திருமகளார் அன்னை ஃபாத்திமா அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்ததுடன், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்து கொண்டிருந்த எதனையும் நான் செய்யாமல் விட மாட்டேன் என்றும் அறிவித்தார்கள் சட்டத்தின் முன் அனைவரும சமம் என்றும் உரிமையை நிலைநிறுத்திச் சென்ற மாநபி (ஸல்) அவர்கள் வழியிலேயே அவர்களது சகாக்களும் வாழ்ந்து காட்டினர்.

நெறியான நியாயாதிபதி

நம்பிக்கைக்குரியவர் (அல் அமீன்) எனப்புகழப்படும் பெருமானார் (ஸல்)முன்னிலையில் மக்ஜூம் வர்க்கத்துப் பெண்ணொருத்தி திருடி விட்டதாகக் குற்றஞ்சாட்டப் பட்டாள். 'அவள் பெரிய இடத்துப் பெண் அவளை மன்னித்து விடுதல் நல்லது' என்று குறைஷிகள் எண்ணியிருந்தார்கள்.

உஸாமாபின்ஜைனத்தை சிபாரிசுக்காக நபிகளாரிடம் அனுப்பினர். அண்ணலார்(ஸல்) அது கண்டு, கோபங் கொண்டு, "பனீ இஸ்ராயீல் வர்க்கத்தினரும் இத்தகைய பட்சாதாபத்தைக் கொண்டே அழிந்து போனார்கள்; முஹம்மதின் குமாரியாகிய பாத்திமாவே திருடிய போதினும், நான் நிச்சயமாகவே அந்நங்கையின் கரங்களைத் துண்டித்து விடுவேன்" என்று கூறினார்கள். *(பா.தாவூத்ஷா, நாயகத்தின் நற்குணங்கள், சென்னை, 1956 பக் 31,32)* எல்லோருக்கும ஓர் நீதி, எல்லோருக்கும் சமஉரிமை என்று காட்டியவர் மாநபி (ஸல்) அதே வேளையில் 'குற்றவாளியை விடுவிக்க ஏதேனும் வழியிருப்பின் அவரை விடுவித்து விடுங்கள் ஏனெனில் நிச்சயமாக அதிகாரி தண்டனை அளிப்பதில் தவறி விடுவதை விட, விடுவிப்பதில் தவறி விடுவது மிகவும் மேலானதாகும்' என்று அண்ணலார் கூறியதாக ஸஃபான் இப்னு உமையா(ரலி) அறிவிக்கிறார்கள். *(முஅத்தா, அபூதாவூத், நஸாயீ, அல்ஹதீஸ், பெருமானாரின் பொன்மொழிப்பேழை, இரண்டாம் பகுதி,* M.R.M.*அப்துற்றஹீம் சென்னை 2002 பக் 224)*

மழலை, மாற்றார் , அடிமை, மனைவி ஆகியோரின் உரிமைகள்

'நீங்கள் உண்ணும் போது அவளையும் உண்ணச் செய்யுங்கள் உடைவாங்கும் போது அவளுக்கும் உடை வாங்கிக் கொடுங்கள். அவளது முகத்தில் அடிக்காதீர்கள். அவளைச் சபிக்காதீர்கள்' என்று அண்ணலார் (ஸல்)கூறியதாக ஹகீம்பின் முஆவியா(ரலி) அறிவிக்கிறார்கள். தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்புகளில் மிகச் சிறந்தது அவர்களுக்கு அளித்திடும் நல்ல கல்வியும் நல்லொழுக்கப் பயிற்சியுமே' என்று குழந்தைகளின் உரிமைகள் குறித்து அண்ணலார் கோடிட்டுக் காட்டிச் சென்றார்கள். (அறிவிப்பாளர் ஸயீதுப்னுல்ஆஸ் (ரலி)) 'தன்பக்கத்தி லிருந்தும் அண்டை வீட்டார் பசித்திருக்க தான்மட்டும் வயிறார உண்பவர் ஓர் இறை நம்பிக்கை யாளராய் இருப்பதில்லை' என்று அறிவித்த அண்ணலார் அண்டை வீட்டாரோடு நேசமாக இருக்கவும், அவர்களது உரிமைகளைப் பேணவும் அடையாளங்

காட்டிச் சென்றுள்ளார்கள். 'யாசிப்பவனுக்கு எதாவது கொடுங்கள், அதுஎரிந்து போன குளம்பாக இருந்தாலும் சரியே' என்று ஏழை எளியவர்களின் உரிமைகளை ஏந்தல் நபி எடுத்துக்காட்டிச் சென்றுள்ளார்கள். அண்ணலார் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: 'அடிமையின் உரிமை அவனுக்கு உணவும், உடையும் அளிப்பதாகும். அவன் தாங்க முடிந்த அளவிற்கே அவன் மீது வேலைப்பளுவை சுமத்தப்பட வேண்டும்' ***(முஸ்லிம்) (மௌலானா ஜலீல் அஹ்ஸன் நத்வீ, அண்ணல் நபிகளார வாழ்வினிலே, சென்னை, 1994, பக் 129, 163)*** அடிமைகளுக்கு விடுதலை உரிமை அளித்தவர் அண்ணலார்.

கல்வியறிவு உரிமை

திருகுர்ஆனில் கல்வி பற்றிய வசனங்கள் அனைத்தும் ஆண்களையும், பெண்களையும் பொதுவாகவே குறிப்பிடுகின்றன. கல்வி கற்பதில் ஆண்களுக்கு இருக்கின்ற உரிமை பெண்களுக்கும்உண்டு. 'அவர்களுக்கு (பெண்களுக்கு) கல்வி கற்பியுங்கள்' என்று மாநபி (ஸல்) மொழிந்துள்ளார்கள்.

கற்புரிமை

'ஒரு பெண்ணின் கற்பை சூறையாடுவது' இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது. 'விபச்சாரத்தின் அருகிலும் நெருங்கி விடாதீர்' என்று திருகுர் ஆன் (17:32) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது. 'கற்பழிப்பில் பெண்ணின் கற்பு மட்டும் அழிவதில்லை ஆணின் கற்பும் அழிந்து விடுகிறது' எனச் சாடுகிறார் மாநபி (ஸல்) அவர்கள்.

பெண்ணுரிமையின் பாதுகாவலர்

அப்துல்லாஹ் இப்னுஉமர் (ரலி) இரவு முழுவதையும் இறை வணக்கத்திலும், பகல் முழுவதையும் நோன்பு நோற்பதிலும் செலவழித்து வருவதை அறிந்த அண்ணலார் (ஸல்) அத்தோழரின் இல்லம் சென்று, 'நீர் அவ்வாறு செய்யாதீர். இரவில் கொஞ்சநேரம் விழித்திருந்து இறைவனை

வணங்கும்; ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைப்பீர்' என்று கூறியதோடு, உம்முடைய உடலுக்குச் சம உரிமை உண்டு. விழிகளுக்கும், இரைப்பைக்கும், உரிமை உண்டு, உம்முடைய மனைவிக்கும் நீர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு என்று அறிவுறுத்தி, பெண் உரிமையின் பாதுகாவலராகப் பெருமானார் (ஸல்) புவியில் திகழ்ந்தார்கள்.

அன்னை உம்முசல்மா

ஹுதைபிய்யா உடன்படிக்கையில் ஒரு இக்கட்டான சூழ்நிலையின் போது, அன்னை உம்மு சல்மாவின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி காரியமாற்றி, அளவிலா வெற்றியும் பெற்றார்கள் அண்ணலார் (ஸல்)

போர்ப்பயிற்சியில் பெண்கள்

சாதாரண கல்விகளில் மாத்திரமல்ல, யுத்தப்பயிற்சிகளிலும் முஸ்லிம் பெண்கள் ஈடுபட்டதாக சரித்திரம் கூறுகிறது. அபூபக்கர் (ரலி) அவர்களின் அன்புமகளான ஆய்ஷா (ரலி) ஈட்டி எறிவதிலும், அம்பு எய்வதிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

உமையாபிந்த்கைஸ்

ஒருமுறை யுத்தத்தில் நபி (ஸல்) அவர்களுடன் போர்க்களத்திற்குச் சென்று எதிரிகளுடன் வீரமிக்க போர் புரிந்தார் உமையா பிந்த்கைஸ் எனும் பெண்மணி; அப்போரில் வெற்றி கிட்டியது; இவரது வீரச்செயலுக்காக அண்ணலார் (ஸல்) ஒரு மாலையைக் கொடுத்து அவரைக் கௌரவித்தார்கள். அவரும் தமது மரணம் வரை அந்த மாலையை மிக்க மரியாதை யோடு அணிந்து வந்தார்; அவரது மரணத்திற்குப் பின்னும், அம்மாலையானது அவர்களிட மிருந்து கழற்றப்படாமல், அப்படியே அவர்களுடன் சேர்த்தே அவர்களது விருப்பப்படியே அடக்கம் செய்யப்பட்டது. மாநபி (ஸல்) காலத்தில் பெண்கள் போர்க்களத்தில் பணியாற்றியதோடும், தம் உரிமைகளைப் பேணுவதிலும் உரிய உரிமைகளைப் பெற்றிருந்தனர்.

உயிரினங்களின் உரிமைகள்

நபி (ஸல்) அவர்கள், விலங்குகளின் முதுகில் அடிப்பதையும்,முகத்தில் சூடு இடுவதையும் தடுத்தார்கள். விலங்குகளை ஒன்றோடு ஒன்று சண்டை போட விட்டு வேடிக்கை பார்ப்பதையும் தடுத்தார்கள் *(திர்மதி)* பாம்பு, தேள், போன்ற விஷப்பிராணிகளைக், கூட தீயிட்டுப் பொசுக்குவதை இஸ்லாம் அனுமதிக்க வில்லை. ஒருமுறை நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தைக் கடந்து சென்றார்கள். அதன் வயிறு அதன் முதுகில் ஒட்டியிருந்தது. அதனைக் கண்ட பெருமானார் (ஸல்) இந்த வாயில்லா கால் நடைகளின் விஷயத்தில் இறைவனுக்கு அஞ்சுங்கள் என்றார்கள் (நூல் அபூதாவூத்)

தோழர் என்னும் உரிமை

மாநபி (ஸல்) தன்னைப் பின்பற்றுபவர்களைத் தனது காலத்தில் ஸஹாபி (தோழர்) எனும் அடைமொழியை அளித்து, யாரும் கொடுத்திராத சிறப்பை வழங்கி, அவர்களது உரிமையை நிலைநாட்டினார்கள்.

சிறுவர்களின் உரிமை

மாநபி (ஸல்) எப்போது பால் அருந்தினாலும் மீதமுள்ள பாலை த் தனது **வலது**புறத்தில் இருப்பவர்களுக்கு கொடுப்பது வழக்கம். ஒரு நாள் தனது வலப்புறத்தில் இரண்டு சிறுவர்கள் அமர்ந்திருந்தனர். இடது புறத்தில் இருந்த பெரியவரிடம் அந்தப் பாலைக் கொடுக்கட்டுமா? என்று அண்ணலார் (ஸல்) கேட்க அச்சிறுவர்கள், தங்கள் உரிமையை விட்டுத் தர இயலாது என்று கூற, அச்சிறுவர்களுக்கே அந்தப்பாலை வழங்கி அவர்களது உரிமையைக் காத்தவர் மாநபி (ஸல்) *(ஃபாத்திமா சம்சுதீன், மணிச்சுடர் 2003 ரமளான் மலர் பக் 120)*

ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை

“ஒடுக்கப்பட்டவர்கள் கொடுமைக் காரர்களுக்கு எதிராகத் திரண்டெழுந்து அவர்களைத் தண்டிப்பதற்கும்”, (திருகுர் ஆன் 26:227) “ஒடுக்குமுறைக்கு ஆளான பின்பு அதிலிருந்து விடுபட்டுத் தலை நிமிர்ந்து

வாழவும்" (27:5) அவர்களுக்குள்ள உரிமையைத் திருகுர் ஆன் அங்கீகரிக்கிறது; விடுதலை குறித்த பிசிறற்ற இறையியற் கொள்கையை திருகுர் ஆனிலிருந்து அறிஞர் அஸ்கார் அலி என்ஜினியர் அழகுற வடித்தெடுத்துள்ளார். (Asghar Ali Engineer, Islam and its Relevance to our Age, Institute of Islamic studies, Mumbai, 1984, see the Essay Developing Liberation Theology in Islam PP 88-129)

அடிப்படை உரிமைகள் அனைத்தும் தந்தவர்

இப்புவியில் மனிதர்கள் வாழ்வதற்கான உரிமை, உயிர் பாதுகாப்புக் கானஉரிமை, அடிப்படை வாழ்க்கைத்தரத்திற்கான உரிமை, தனிமனித சுதந்திரத்திற்கான உரிமை, நீதிபெறும் உரிமை, துணை போவதற்கும், துணை போகாமல் இருப்பதற்கும் உள்ள உரிமை, உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு உரிமை, கொடுங்கோன்மைக்கு எதிராகப் போராடும் உரிமை, கூட்டமைப்பை உருவாக்கும் உரிமை, கருத்துச் சுதந்திர உரிமை, சமயக் கோட்பாட்டு உரிமை, எதேச்சதிகாரமாக சிறைப்படுவதிலிருந்தும் பாதுகாப்பு உரிமை, தீமையைத் தவிர்ப்பதற்கானஉரிமை, ஆட்சியாளர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர் எனும் உரிமை, எந்தச் சூழ்நிலையிலும் பெண்களின் கண்ணியமும் கற்பும் மதிக்கப்பட வேண்டும் எனும் உரிமை, விதவை மறுவாழ்வு உரிமை, பெண்களுக்குச் சொத்துரிமை, மறுமணஉரிமை, யுத்த சூழ்நிலையிலும் பெண்கள், குழந்தைகள், முதியோர், நோய்வாய்ப்பட்டவர்கள், காயமுற்றவர்கள் ஆகியோர் மீது கை வைக்காதிருக்கும் உரிமை, போரில் பங்கு பெறுவோரை நெருப்பினால் சித்ரவதை செய்தல் கூடாது எனும் உரிமை, காயம் பட்டவர்களைக் காக்கும் உரிமை, போர்க்கைதிகளை கொல்லக் கூடாதென்னும் உரிமை, போரின் போது எதிரிகளின் சடலங்களைத் திருப்பிக் கொடுக்கும் உரிமை, இஸ்லாமிய அரசின் எல்லைக்குள் வாழ்கின்ற முஸ்லிமல்லாதவர்களுக்கு வழங்கப்படுகின்ற பல வித உரிமைகள், இவ்வாறு அண்ணலார் (ஸல்) இப்புவியில் காட்டிச் சென்ற மனித உரிமைகள் , ஏராளம்; ஏராளம்.

முடிவாக

இத்தாலியைச் சேர்ந்த சிரக்குசா எனுமிடத்தில் 1979 மே 28-31 நாட்களில் எம்.செரிஃப் பாஸியவ்னி, மற்றும் அகமது ஃபாத்தி சொரவர் ஆகிய பேராசிரியர்களின் தலைமையில் , உயர்க்குற்றவியல் அறிவியில்களுக்கான சர்வதேசக் கழகத்தில் 'இஸ்லாமியக் குற்றவியல் நீதியின் கீழ் மனித உரிமைகளின் பாதுகாப்பு' எனும் பொருள் பற்றி நடைபெற்ற முதல் சர்வதேச மாநாட்டில் எகிப்து, சிரியா, லிபியா,சவூதிஅரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்டுகள், அல்ஜீரியா, சோமாலியா, மாரிட்டானியா, ஜோர்டான், சூடான் ஆகிய நாடுகளின் அதிகாரிகளும், அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், யூகோஸ்லாவியா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், சட்டவல்லுநர்களும் கலந்து கொண்டனர். இதில் இஸ்லாம் ஒப்புக் கொள்ளும் மனித உரிமைகள் பற்றி விவாதிக்கப்பட்டது.*(எம்.செரீஃப் பாஸியவ்னி தொகுத்த இஸ்லாமியக் குற்றவியல் நீதிமுறை நூலில்)*(The Islamic Criminal Justice System edited by M.Cheriff Bassiouni, Oceana Publications, Newyork 1982)

கொடுங்கோன்மையான முறையில் மேற்கொள்ளப்படும் கைது சிறைவைப்பு, சித்திரவதை அல்லது உயிரை அழித்தல் ஆகியவற்றுக்கெதிரான உரிமை சட்டவிதிப்படி அமைந்த நேர்மையான பாரபட்சமற்ற நீதிமன்றம் மூலம் குற்றவாளி என முடிவு செய்யப்படும் வரை ஒருவரை அப்பாவி எனக்கருதலுக்கான உரிமை, மேல் முறையீட்டுக்கான உரிமை போன்ற பல உரிமைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (A.G.Noorani, Islam and Jihad, ஏ.ஜி.நூரனி இஸ்லாமும் ஜிகாத்தும், தமிழில் சாமி, 2003, பக் 111, 112)மாநபி (ஸல்) மனித குலத்திற்கு காட்டிச் சென்ற மனித உரிமைகள் பல மறுக்கப்படுகின்ற காலத்தில் வாழ்ந்து வருகிறோம்.

ராபர்ட் கிரீன் இங்கர்சால் (11.8.1833- 21.6.1899)

1877 இல் மக்கள் உரிமை எனும் தலைப்பில் பேரறிஞன் இங்கர்சால் ஆற்றிய உரையின் இறுதியில் கூறுவார்;ஏ! சுதந்திரமே! உரிமையே

நீ எங்கே இருக்கிறாய்? கைக்கெட்டாத ஆகாயத்தில் நீ மிதந்து கொண்டிருக்காதே அல்லது ஒரு கவிஞனின் கனவில் தோன்றித் தோன்றி மறையாதே! உற்சாகியின் உள்ளத்தில் ஒளிந்து கொண்டிராதே! வா! கீழே இறங்கி வா! எங்கிருந்தாலும் சரி, ஓடிவா! மக்களிடம்! ஆம்! ஆண்களிடம் - பெண்கள் மத்தியில் - குழந்தைகளிடம் நீ வாசஞ்செய்! மக்கள் மத்தியில் நீ இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொள்! விரிந்து பரந்து கிடக்கும் எதிர்காலம் என்னும் கடலிலிருந்து ஆண் பெண் குழந்தை முதலியவர்கள் அடங்கிய மக்கள் உரிமை என்னும் அருமையான ஒரு கலத்தைத் தவிர வேறு எதுவும் நிகழ் கால கரையைத் தொட இயலாது. ஆகவே மக்கள் உரிமை பெருகித் தழைக்கட்டும்.

மறுமை வரையிலும் மாநபி காட்டிய வழி

'அண்ணலே (ஸல்) உங்களைப் புகழக் கருதி நாங்கள் வரையும் வாசகங்கள் பலவாறாக இருப்பினும் உங்கள் அழகு ஒன்றேயாகும். ஆதலின் உங்களைப் புகழ்ந்து வரையப்படும் வாசகங்கள் யாவும் உங்களின் ஒரே அழகைத்தான் சாரும்' எனும் கவிதை நினைவிற்கு வருகிறது (சி.கா.ஷெய்க் இப்ராஹிம்,இறுதி நபியின் (ஸல்) கடைசி ஹஜ்ஜும் சமதர்ம சொற்பொழிவும், பேட்டை, ஹிஜ்ரி 1351, பக் 1) மாநபி காட்டிய மனித உரிமைகள் பற்றி மறுமை நாள் வரையிலும் இவ்வுலகில் முழக்கம் செய்யப்படும். முடியும் வரை, மரணமே வந்தாலுங்கூட அதனைக் காத்திட போராடப்படும்; மனித குலம் அதனால் உரிமையயோடு சிறக்கும், உலகில் உவகை பெருகும், உலகம் அதை உணர்ந்து கொண்டேயிருக்கும்.

"இறைவனின் படைப்புகள் அனைத்தும் அவனது குடும்பமே!
இறைவனிடம் மிகுந்த அன்புக்குரியவன்,
அவனது படைப்பினங்களை
அதிகம் நேசிப்பவனே ஆவான்"

- அண்ணலார் (ஸல்)

மாட்சிமை தங்கிய
குடியரசுத் தலைவர் அவர்களின்
வாழ்த்து மடல்

A.P.J. Abdul Kalam

Rashtrapati Bhavan
New Delhi - 110004

ஏப்ரல் 30 2004.

திரு. திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களது கடிதமும், புத்தகங்களும் கிடைத்தன. நன்றி.

உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்

(ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்)

திரு. செ. திவான்,
சுஹைனா பதிப்பகம்,
106, F,4-A, திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை - 627 002,
தமிழ்நாடு.